DINAMALAR

Page No: 02 Date: 21.10.2023

# பல்கலை பேராசிரியர்களுக்கு சர்வதேச அங்கீகாரம்

**புதுச்சேரி, அக். 21–**

ஸ்டான்போர்ட் பல்கலையால் தொகுக்கப்பட்டு, எல்சேவியரால் வெளி யிடப்பட்ட 2023ம் ஆண்டிற்கான முதல் 2 சதவீத விஞ்ஞானிகளின் உலகளாவிய தரவரிசையில் புதுச்சேரி பல்கலையின் 16 பேராசிரியர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இந்த தரவரிசைப் பட்டியல் பேராசிரியர்களின் ஆராய்ச்சி கட்டுரைகள் கணக்கிடப்படுகிறது. இதில், புதுச்சேரி பல்கலை பேராசிரியர்கள் ராஜீவ் ஜெயின், அப்பாஸி, போர்சேசியன், சுப்ரமணிய அங்கையா, தஸ்னீம் அப்பாஸி, ஜோசப் செல்வின், ராமசாமி முருகன், சேகல்கிரண், பிரசாந்த், ஸ்ரீகுமார், நடராஜன் சக்திவேல், ரவீந்திரநாத் பவுமிக், கண்ணன், ஆறுமுகம் வடிவேல் முருகன், பினோய்கே சாஹா, ஹன்னா வசந்தி இடம் பெற்றுள்ளனர்.

புதுச்சேரி பல்கலைக்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த பேராசிரியர்களை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

DAILY THANTHI

PAGE NO: 06 Date: 21.10.2023



### உலகளாவிய விஞ்ஞானிகள் பட்டியலில்

# புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர்கள் 16 பேர் இடம்பெற்றனர்

புதுச்சேரி, அக்.21–

அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தால் தொகுக்கப்பட்டு எல்சேவியரால் வெளியிடப்பட்ட 2023–ம் ஆண்டிற்கான முதல் 2 சதவீத விஞ்ஞானிகள் உலகளாவிய தரவரிசை பட்டியலில் புதுவை பல்கலைக்கழகத்தின் 16 பேராசிரியர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்த தரவரிசை பட்டியல் பேராசிரியர்களின் ஆராய்ச்சி கட்டுரைகளின் எண்ணிக்கை, மேற்கோள்கள் மற்றும் ஆராய்ச்சியின் தாக்கம் உள்பட பல்வேறு அளவுகோல்களை கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ள புதுவை பல்கலைக்கழக பேராசிரியர்கள் தங்கள் ஆராய்ச்சி துறைகளில் கணிசமான பங்களிப்பை செய்துள்ளனர். பேராசிரியர்களான சிறப்பு பணி அதிகாரி ராஜீவ் ஜெயின், அப்பாஸி, போர்சேசியன், சுப்ரமணிய அங்கையா, தஸ்னீம் அப்பாஸி, ஜோசப் செல்வின், ராமசாமி முருகன், சேகல் கிரண், பிரசாந்த், ஸ்ரீகுமார், நடராஜன் சக்திவேல், ரவீந்திரநாத் பவுமிக், கண்ணன், ஆறுமுகம் வடிவேல் முருகன், பினோய் கே.சாகா, ஹன்னா ஆர். வசந்தி ஆகியோர் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். அவர்களுக்கு துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.